**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி**

முன்னிலை : திரு.N.பாரதிராஜன், பி.ஏ., பி.எல்.,

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி**

2023 ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 01 ஆம் நாள் வெள்ளிகிழமை

**இ.ம.எண்.02/2023 இன் அ.வ.எண்.01/2017**

1) திருமலைசாமி கவுண்டர்
2) மயிலாத்தாள் அவருக்காக
அவரது அதிகார முகவர்
திருமலைசாமிகவுண்டர் ... 1,2 மனுதாரர்கள்/வாதிகள்
3) சரஸ்வதி
4) காளியம்மாள்
5) தனலட்சுமி
6) சிவசுப்பிரமணியம் ... 3 முதல் 6 மனுதாரர்கள் / உத்தேச வாதிகள்

/ எதிர் /

1) காளியம்மாள்
2) தனசாமி
3) மாரியம்மாள்
4) விக்டோரியா
5) தனஜெயன்

... எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது கடந்த 22.11.2023 அன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது 1,2 மனுதாரர்கள்/வாதிகள் மற்றும் 3 முதல் 6 மனுதாரர்கள்/உத்தேச வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.P.சண்முகம் அவர்கள் ஆஜராகியும், 1 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.செல்வகுமார் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S.P.காமாட்சிகுமார் அவர்கள் ஆஜராகியும், 4 மற்றும் 5 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அசல் வழக்கில் தோன்றாதரப்பினர்கள் ஆக்கப்பட்டும், இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட வாதங்களின்படியும், ஆவணங்களின்படியும், இந்நீதிமன்றம் இன்று வழங்கிடும் கீழ்க்கண்ட....

**ஆணையுரை**

3 முதல் 6 உத்தேச தரப்பினர்களை அசல் வழக்கில் வாதிகளாக கட்சிசேர்க்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 3 பிரிவு 151–ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2)** இம்மனுவின் மனுதாரர்கள் இவ்வழக்கில் வாதிகளாக கட்சி சேர்க்கப்பட வேண்டியவர்கள் ஆவார்கள். அசல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி இறந்துவிட்டார், 2ம் வாதி அவரது மனைவி, 3 முதல் 5 மனுதாரர்கள் அவரது மகள்கள், 6ம் மனுதாரர் அவரது மகன் ஆவர். வழக்கு சொத்தில் 1ம் வாதிக்கு உள்ள உரிமை, அவரின் வாரிசுகளான மனுதாரர்களுக்கு உள்ளது. எனவே, 1ம் வாதியின் வாரிசுகளான 3 முதல் 6 மனுதாரர்களை இவ்வழக்கில் வாதிகளாக கட்சிசேர்க்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில்,** 1ம் வாதி தனக்காகவும், 2ம் வாதியின் பவர் ஏஜெண்ட் என்பதற்காகவும் சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தார். 1ம் வாதி இறந்துவிட்டதால், 2ம் வாதி 1ம் வாதிக்கு கொடுத்திருந்த பவர் பத்திரம் சட்டப்படி ரத்தாகிவிட்டது. இந்நிலையில் மனுவை 2ம் மனுதாரர் அவரின் பவர் ஏஜெண்ட் மூலம் தாக்கல் செய்துள்ளது போல தாக்கல் செய்துள்ளார். அவ்வாறு 2ம் மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்ய முடியாது. மேலும், இந்த மனுவை 2ம் வாதி தனிப்பட்டு நேரிலோ அல்லது வக்காலத்து கொடுத்து வக்கீல் மூலுமாகவோ முன்னிலையாக முடியும். மேற்படி 2ம் மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்யாதால் இம்மனு சட்டப்படி செல்லாது.

**4)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**5)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை என்னவெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே.

6) <u>பிரச்சினை</u> :

இரு தரப்பிலும் எடுத்துரைக்கப்பட்ட சங்கதிகளை இந்நீதிமன்றம் தீர பரிசீலனை செய்ததில், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் வாதி இறந்துவிட்டதால் அவரது வாரிசுகளை வாதிகளாக கட்சிசேர்த்து உத்தரவிடகோரி 3 முதல் 6 மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1 முதல் 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில், 1ம் வாதி தனக்காகவும், 2ம் வாதியின் பவர் ஏஜெண்ட் என்பதற்காகவும் சேர்த்து இவ்வழக்கை தாக்கல் செய்திருந்தார் என்றும், 1ம் வாதி இறந்துவிட்டதால், 2ம் வாதி 1ம் வாதிக்கு கொடுத்திருந்த பவர் பத்திரம் சட்டப்படி ரத்தாகிவிட்டது என்றும், மேலும், இந்த மனுவை 2ம் வாதி தனிப்பட்டு நேரிலோ அல்லது வக்காலத்து கொடுத்து வக்கீல் மூலுமாகவோ முன்னிலையாக தாக்கல் செய்யாதால் இம்மனு சட்டப்படி செல்லாது என்றும் எதிர்வாதம் வைக்கப்பட்டுள்ளது.

7) வழக்குரையை பரிசீலனை செய்கையில், வழக்கு சொத்து தங்களுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரமும், வாதிகளின் சுவாதீனத்தில் உள்ள சொத்துக்களில் பிரதிவாதிகளோ, அவர்களது ஆட்களோ எந்த இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கை 1 மற்றும் 2 வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள். 3 முதல் 6 உத்தேச தரப்பினர்கள் 1ம் வாதியின் வாரிசுகள். மேலும், மேற்படி 3 முதல் 6 உத்தேச தரப்பினர்கள் 1ம் வாதியின் வாரிசுகள் என்பது 1 முதல் 3 எதிர்மனுதாரர் அவர்களது எதிருரையில் மறுக்கவில்லை. 1 முதல் 3 எதிர்மனுதாரர் தரப்பில் வைக்கப்பட்டுள்ள எதிர்வாதம் நடைமுறை சிக்கலேயன்றி இம்மனுவை அனுமதிக்க ஒரு தடையாக இல்லை. ஆகவே, 1ம் வாதி இறந்துவிட்டதால், அவரின் வாரிசுகள் இவ்வழக்கில் கண்ட பிரச்சனைக்கு முழுமையாக முடிவு செய்வதற்கு அவசியதரப்பினர்கள் ஆவார்கள்.

முடிவில், இம்மனுவானது அனுமதிக்கப்பட்டு 3 முதல் 6 உத்தேச மனுதாரர்களை அசல் வழக்கில் வாதிகளாக கட்சி சேர்க்க உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வாணையுரை என்னால் சுருக்கெழுத்து தட்டசருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பிழை நீக்கம் செய்ததை என்னால் இன்று (01.12.2023) அவையறிய பகரப்பட்டது.

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு</u>**
**<u>சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:</u>**

..... இல்லை .....

**(ஒப்பம்)/– N. பாரதிராஜன்**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---

**<u>அசல் ஆணையுரை</u>**
ஐ.ஏ.02/2023 இன் ஓ.எஸ்.01/2017
நாள் : 01.12.2023
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்
பொள்ளாச்சி

---